# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## நடப்பு நிகழ்வுகள்

### நாள்: 23 /06/2024




https://t.me/ChinmayaTnpsc

# தமிழ்நாடு

## தமிழ்நாடு அரசு - புதிய நீர்நிலைகள் உருவாக்க திட்டம் :

**நிகழ்வு :**

- அரசு கிராமப்புறங்களில் விவசாயத்திற்காக 5,000 புதிய நீர்நிலைகளை உருவாக்க திட்டமிட்டுள்ளது .
- விவசாயத்தை மேம்படுத்தவும், நிலத்தடி நீரை மேம்படுத்தவும் மாநில அரசு கிராமங்களில் 5,000 நீர்நிலைகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது .
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்** கீழ் நீர்நிலைகள் உருவாக்கப்படும்.

**தேர்வுக்கு தேவையானவை :**

- MGNREGA 2005 இல் **மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால்** தொடங்கப்பட்ட உலகின் மிகப்பெரிய வேலை உத்தரவாத திட்டங்களில் ஒன்றாகும்.
- இத்திட்டத்தின் முதன்மை நோக்கம், பொதுப் பணியைச் செய்ய விரும்பும் கிராமப்புற குடும்பங்களில் உள்ள வயது முதிர்ந்த உறுப்பினர்களுக்கு **ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்கள் வேலைவாய்ப்பை உத்தரவாதம்** செய்வதாகும்.
- 2022-23 நிலவரப்படி, MGNREGA இன் கீழ் **15.4 கோடி** செயலில் உள்ள தொழிலாளர்கள் உள்ளனர்.

https://t.me/ChinmayaTnpsc

## இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டம் :

**நிகழ்வு**

தமிழக நிதியமைச்சர் அனைத்து மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் தனது உரையில், **2-ஆம் கட்ட மெட்ரோ திட்டம்** செலவீன தொகை ரூ. 63,246 கோடி, என்று ஆகஸ்ட் 17, 2021 அன்று பொது முதலீட்டு வாரியத்தால் (PIB) பரிந்துரைக்கப்பட்டது, ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளாக **பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின்** (CCEA) ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது என்று கூறினார்.

**தேர்வுக்கு தேவையானவை** :

**அமைச்சரவைக் குழு (Cabinet Committee ):**

- அமைச்சரவைக் குழு என்பது அமைச்சரவையின் பணிச்சுமையைக் குறைப்பதற்கான நிறுவன ஏற்பாடுகள் ஆகும்.
- அமைச்சரவைக் குழு அரசியலமைப்பிற்கு சட்டத்திற்கு வெளியில் ஏற்படுத்தப்பட்டவை
- இந்தியாவில், நிர்வாக துறையானது , **1961 ஆம் ஆண்டு இந்திய அரசின் நிர்வாக பரிவர்த்தனை விதிகளின் கீழ்** செயல்படுகிறது.
- இந்த விதிகள் **அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 77(3)** இலிருந்து பெறப்பட்டவை . "இந்திய அரசாங்கத்தின் எளிமையான நிர்வாககத்திற்கான செயல்பாடு வசதிகளை உருவாக்க **ஜனாதிபதி விதிகளை** உருவாக்குவார் என்பதாகும் .
- இவை இரண்டு வகையான குழுக்கள் ஆகும்
  - ✓ **நிரந்தர குழு** அல்லது **நிலைக்குழு** (Standing committee )
  - ✓ **தற்காலிக குழு** (Ad-Hoc committee )

https://t.me/ChinmayaTnpsc

- பிரதம மந்திரி அமைச்சரவையின் நிலைக்குழுக்களை அமைத்து அவற்றின் குறிப்பிட்ட செயல்பாடுகளை வரையறுக்கிறார்.
- குழுக்களின் எண்ணிக்கையை கூட்டவோ குறைக்கவோ பிரதம மந்திரிக்கு அதிகாரம் உண்டு
- அமைச்சரவை நிலைக்குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை மூன்று முதல் எட்டு வரை மாறுபடும்.
- அவர்கள் பொதுவாக கேபினட் அமைச்சர்களை மட்டுமே உள்ளடக்குவார்கள். இந்த அமைச்சரவை குழுக்களில் **கேபினட் அமைச்சர்கள் அல்லாதவர்களும் உறுப்பினர்களாக** இருக்கலாம்.

**இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டம் :**




**<u>தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம் National Programme for Dairy Development (NPDD) :</u>**

**நிகழ்வு :**

தரமான பால் பொருட்கள் வழங்குவதை உறுதி செய்வதற்காக, தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு

https://t.me/ChinmayaTnpsc

மாவட்ட கூட்டுறவு பால் சங்கங்களில் புதிய ஆய்வகங்கள் நிறுவப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

**தேர்வுக்கு தேவையானவை :**

**தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டம்**

- கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையானது நாடு முழுவதும் பால்வள மேம்பாட்டுத் திட்டத்தை **பிப்ரவரி-2014** முதல் செயல்படுத்தி வருகிறது, இந்தத் திட்டம் 2021-22 முதல் 2025-26 வரை செயல்படுத்துவதற்காக **ஜூலை 2021** இல் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகளுக்கும் அவர்களின் நுகர்வோருக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தும் குளிரூட்டி தொழில்நுட்பம் மற்றும் வணீக சங்கிலி உள்கட்டமைப்பை உருவாக்குதல்
- பால் உற்பத்தி, கொள்முதல், சந்தைப்படுத்தல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றிற்கு தேவையான உள்கட்டமைப்பை வலுப்படுத்தி உருவாக்குதல்.
- பால் பண்ணையாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பொருத்தமான பயிற்சி உள்கட்டமைப்பு மற்றும் வசதிகளை உருவாக்குதல்.
- கிராம அளவில் பால் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல்


TNPSC Group I - க்கான
மாநில அளவிலான
இலவச மாதிரித் தேர்வுகள்
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
Academy which cares to be different
FREE MOCK TEST SERIES
Test 1 16 June 2024
Test 2 23 June 2024
Test 3 30 June 2024
Test 4 07 July 2024
Registration Must
Scan to register
OFFLINE
ONLINE
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
ANNA NAGAR WEST, CHENNAI - 600 040.
93605 31076 / 63838 61374